பக்கங்கள் 16
விலை ரூ. 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 124

வியாழக்கிழமை 30 மார்ச் 2023

பங்குனி 16 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

**முச்சந்தி முரளி**



“பெற்றோல் விலை குறையும் முன்னே எலக்சன் வரும் பின்னே!”

## வெடியரசன் கோட்டையில் முன்னணியினர் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 30
நெடுந்தீவு வெடியரசன் கோட்டைக்கு அருகில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை பௌத்த விகாரையுடன் தொடர்புபடுத்தி கடற்படை அமைத்த பதாகையால் அங்கு அண்மையில் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. »04

## வெடுக்குநாறிமலையில் ஞாயிறன்று ஆதிலிங்கேஸ்வரர் மீளப்பிரதிஷ்டை

### அமைச்சர் ஜீவன் உறுதி



வவுனியா, மார்ச் 30
வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறிமலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஆதிலிங்கம் உடைத்தெறியப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் ஞாயிறன்று அதே இடத்தில் லிங்கம் மீள அமைக்கப்படும் என்று அமைச்சர் ஜீவன் »15

### ஆதிலிங்கேஸ்வரர் ஆலய அழிப்பு

# வவுனியாவில் இன்று கவனவீர்ப்பு போராட்டம்!

### திட்டமிட்டபடி நடக்குமென அறிவிப்பு

வவுனியா, மார்ச் 30
வவுனியா, வெடுக்குநாறி மலையிலிருந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இடித்தழிக்கப்பட்டமையைக் கண்டித்து, வவுனியா கந்தசாமி ஆலயத்துக்கு முன்பாக திட்டமிட்டபடி இன்று கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது. »15

## ஹெரோய்னுடன் பெண் கைது!

யாழ்., மார்ச் 30
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதுமலைப் பகுதியில், 5 கிராம் 800 மில்லிகிராம் »15

## ஹெரோய்னுடன் 8 பேர் கைது!

யாழ்., மார்ச் 30
யாழ்ப்பாணம் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் »15

## மண்டைதீவு முகாமில் இனி தீவிர சோதனை

யாழ்., மார்ச் 30
தீவுப்பகுதிகளில் இடம்பெறும் திருட்டுச்சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்காக இனி, மண்டைதீவில் உள்ள »15

## இந்துக்களின் பிரச்சினைகள்: நல்லூரில் நாளை கலந்தாய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 30
வடக்கு - கிழக்கில் இந்துக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுக்களை நடத்துவதற்கான அவசர கலந்துரையாடலொன்று யாழ்ப்பாணம் நல்லூர் ஆதீனத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெறவுள்ளது.
நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் »15

## பெற்றோல், டீசலின் விலைகள் குறைப்பு

கொழும்பு, மார்ச் 30
நாட்டில் நேற்று நள்ளிரவுமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. »15

## பேருந்துக் கட்டணங்கள் 10 ரூபாவால் குறைப்பு!

கொழும்பு, மார்ச் 30
பெற்றோல் மற்றும் டீசல் கட்டணங்கள் குறைந்ததையடுத்து பேருந்துக் கட்டணங்கள் 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளன. »15

## தவறிழைக்கும் மாணவர்களுக்கு விடுகைப்பத்திரம் வழங்காதீர்கள்

### ஒழுக்காற்று நடவடிக்கைக்குட்படுத்துங்கள்
### மனித உரிமைகள் ஆ.குழுவினர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 30
பாடசாலை மாணவர்கள் ஏதேனும் தவறிழைத்தால், அந்தத் தவறின் தீவிரத்தன்மையைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு விடுகைப்பத்திரங்களை வழங்குவதற்குப் பதிலாக, உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
பாடசாலை மாணவர்களுக்கு உரிய நடவடிக்கைகளை பின்பற்றாமல், அதிபர்கள் எதேச்சையாக பாடசாலை »15

## கடற்படையின் அனுமதியுடன்தான் வடமராட்சியில் இனி கடற்றொழில்

யாழ்ப்பாணம், மார்ச் 30
வடமராட்சியில் தொழிலுக்குச் செல்லும் அனைத்துப் படகுகளும் கடற்படையினரின் சோதனைச் சாவடியில் அனுமதிபெற்றே இனிச் செல்ல வேண்டும். இந்த நடவடிக்கையைப்பின் »15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிசிவன் ஆலயம் உடைப்பு உடன் அறிக்கை சமர்ப்பிக்குக

## பொலிஸாருக்கு வவுனியா நீதிமன்று உத்தரவு

**வவுனியா, மார்ச் 30**

**வெடுக்குநாறிமலை ஆதிசிவன் விக்கிரகங்கள் இனந்தெரியாத விஷமிகளால் உடைக்கப்பட்டமை தொடர்பில் உடன் விசாரணை செய்து இன்று அறிக்கை சமர்ப்பிக்குமாறும் குற்றவாளிகளை விரைந்து கைதுசெய்யுமாறும் வவுனியா நீதிவான் நீதிமன்று கட்டளை பிறப்பித்துள்ளது.**

வவுனியா வெடுக்குநாறி மலையிலிருந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் உருத்தெரியாமல் அடித்து உடைத்து சிதைக்கப்பட்டுள்ளது. சிவலிங்கம் பெயர்க்கப்பட்டு அருகிலுள்ள பற்றைக்குள் வீசப்பட்டுள்ளதுடன் ஏனைய விக்கிரகங்களும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளன.

இந்த பாதகச் செயலைக் கண்டித்து பல்வேறு தரப்புகளும் கண்டனம் வெளியிட்டு வருவதுடன் கவன வீர்ப்புப் போராட்டங்களையும் முன்னெடுத்துள்ளன.

இந்தநிலையில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலய உடைப்பு தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரின் தொலைபேசி அழைப்புக்களை பெறுவதற்கு நெடுங்கேணி பொலிஸார் வவுனியா நீதவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மனுவொன்றை தாக்கல் செய்தனர்.

இதன்போது மன்றில் சட்டத்தரணி திருச்செல்வம் திருஅருள் தலைமையிலான சட்டத்தரணிகளான சபீஸ், சியாத், திபின்சன், கேதீஸ்வரன், மதுஞ்சளா, நிவிதா, ஜிதர்சன், இளஞ்செழியன் ஆகியோர் பொலிஸாரின் கோரிக்கையை ஆட்சேபித்தனர்.

குறித்த விக்கிரகங்களை உடைத்து அழித்தமை தொடர்பில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை கைதுசெய்யவேண்டும். அதற்கு நீதிமன்று உத்தரவிடவேண்டும் எனக் கோரினர்.

உடைக்கப்பட்ட விக்கிரகங்கள் தொடர்பில், சட்டத்தரணிகளின் கோரிக்கையை ஏற்று வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் உடன் விசாரணை மேற்கொண்டு இன்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விரைவில் குற்றவாளிகள் கைது செய்யப்படவேண்டும் என வவுனியா நீதவான் நீதிமன்ற நீதிபதி சுபாசினி தேவராசா பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-110)



## வெள்ளரிப்பழ வியாபாரம் யாழ்ப்பாணத்தில் அமோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

அதிக வெப்ப நிலைக்கு ஏற்ப வெள்ளரிப்பழம் யாழ்ப்பாணத்தில் அமோகமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

யாழ். பண்ணைப் பகுதிகளிலும் மற்றும் திருநெல்வேலி மரக்கறிக்கடைத்தொகுதி வெளிப்புறங்களிலும் வெள்ளரிப்பழம் விற்பனை செய்யப்படுகின்றது.

பெரிய வெள்ளரிப்பழத்தின் விலை 450 ரூபாவாகவும் சிறிய வெள்ளரிப்பழத்தின் விலை 300 ரூபா வரையும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

பழத்தின் விலையுயர்வு தொடர்பில் வியாபாரிகள் தெரிவிக்கையில்,

விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள மானிய அடிப்படையிலான உரமானியம் கிடைக்காத நிலையில் இவ்வாறான அதிக விலையில் வெள்ளரிப்பழத்தை விற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாங்கள் விவசாயிகளிடம் இருந்து பெரிய வெள்ளரிப்பழத்தை ஒரு கிலோ 350 ரூபாவுக்கும், சிறியது ஒரு கிலோ 200 ரூபாவுக்கும் கொள்வனவு செய்கின்றோம். இதனாலேயே வெள்ளரிப்பழம் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றது - என்றனர். (ஓ-14)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 30

"இணுவில் அருள்மிகு சிவகாமி அம்பாள் ஆலய வரலாற்றுப் பதிவுகள்" எனும் நூல் வெளியீடு, இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-14)

## துண்டிக்கப்பட்ட மின்னிணைப்பை மீள வழங்காததால் மக்கள் சிரமம்

### பல தடவை முறைப்பாடளித்த பின்னரே இணைப்பு வழங்கினர்

மரம் வெட்டுவதற்காகத் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மீள வழங்காததால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர் எனத் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி மீசாலை வடக்கிலுள்ள ஆலயம் ஒன்றின் காணிக்குள் மரத்தை வெட்டும்போது மின் கம்பங்கள் மற்றும் வயர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் மின்சாரத்தை துண்டிப்பதற்கான அனுமதி ஆலய நிர்வாகத்தால் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சாவகச்சேரி மின்சாரசபையால் மீசாலை வடக்குப் பகுதிக்கான மின்சாரம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் துண்டிக்கப்பட்டது.

மரம் தறித்து முடிந்த பின்னர் பிற்பகல் 2.30 மணியளவில் மின் இணைப்பை மீள வழங்குமாறு சாவகச்சேரி மின்சாரசபைக்கு அறிவிக்கப்பட்டது. இருந்த போதிலும் மின் இணைப்பு மீள வழங்கப்படவில்லை.

மின்சாரம் வழங்கப்படும் எனக் காத்திருந்து பொறுமையிழந்த கிராமமக்கள் சுன்னாகம் மின் நிலையத்துக்கு பல தடவைகள் முறைப்பாடு செய்தனர். அதன்பின்னர் பல மணிநேரம் கழித்து இரவு 7.15 மணிக்கே மின்சாரம் வழங்கப்பட்டது என கிராமமக்கள் விசனம் தெரிவித்தனர். (ஓ-14-159)

## கசிப்புக் காய்ச்சும் இடம் பொலிஸாரால் முற்றுகை

யாழ்ப்பாணம், மார்ச் 30

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை கலவரத்து திடல் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்புக் காய்ச்சும் இடம் தருமபுரம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முற்றுகையிடப்பட்டது. தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய கசிப்புக் காய்ச்சும் இடம் முற்றுகையிடப்பட்டு பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது. அதன்போது கசிப்புக் காய்ச்சிக் கொண்டிருந்த இருவரைக் கைது செய்ய முற்பட்ட வேளை ஒருவர் தப்பிச் சென்றதுடன் மற்றையவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 48 லீற்றர் கசிப்பு, கோடா, கசிப்புக் காய்ச்சுவதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணம் என்பன மீட்கப்பட்டன.

அதனையடுத்து சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பு அதிகாரி டி.எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (ஓ-14-113)

## கேரளக் கஞ்சா மாதகலில் மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 30

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதகல் மாசீன் கூடல் பகுதியில் கேரளக் கஞ்சா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளது.

கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து 150 கிலோ எடையுடைய கேரளக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. எனினும் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகள் காங்கேசன்துறை கடற்படை முகாமில் ஒப்படைக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-14-20-26)

## மோ. சைக்கிளில் இருந்து பணம், கடனட்டை திருட்டு

பெண் அரச அலுவலர் ஒருவரின் மோட்டார் சைக்கிளிலிருந்து 80 ஆயிரம் ரூபா பணம், கடனட்டை என்பன திருடப்பட்டுள்ளன. இந்தத் திருட்டுச் சம்பவம் திருநெல்வேலியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அரசஅலுவலர் தனது மகளை வகுப்புக்குள் விடுவதற்காக மோட்டார் சைக்கிளை விட்டுச் சென்றுள்ளார்.

அதன்பின் திரும்பி வந்து பார்த்தவேளை அவரது மோட்டார் சைக்கிள் சீற் உடைக்கப்பட்டு அதிலிருந்த 80 ஆயிரம் ரூபா பணம், கடனட்டை என்பன திருடப்பட்டன.

அத்துடன் கடனட்டையைப் பயன்படுத்தி இரண்டு மதுபானசாலைகளில் 15 ஆயிரம் ரூபாவுக்கு மதுபானம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு கொள்வனவு செய்தவரும் அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் இலக்கமும் கண்டறியப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-14-23)

## தண்ணீர் அருந்தச் சென்றவர் அலைபேசியைத் திருடினார்!

யாழ்ப்பாணம், மார்ச்,30

கல்வியங்காடு - பருத்தித்துறை பிரதான வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் பெறுமதிமிக்க அலைபேசி ஒன்று கடந்த திங்கட்கிழமை திருடப்பட்டுள்ளது என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் வயோதிபப் பெண்ணொருவர் இருந்த வேளை, இனந்தெரியாத நபரொருவர் தண்ணீர் அருந்துவதற்காக உள்ளே நுழைந்துள்ளார். அவரைத் தண்ணீர் அருந்துமாறு கூறிவிட்டு மூதாட்டி வீட்டுவேலைகளில் கவனம் செலுத்திருந்தார். அந்த வேளையில் வீட்டு முற்றத்தில் வைக்கப்பட்டிருந்த பெறுமதிமிக்க அலைபேசியை அந்த நபர் திருடிச்சென்றுள்ளார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டையடுத்து கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விநியோக இடையூறு 20 பேருக்குக் கட்டாய விடுமுறை!

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதிரடி

**கொழும்பு, மார்ச் 30**
**எரிபொருள் விநியோகத்தை பாதிக்கும் வகையில் செயற்பட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் ஊழியர்கள் அடங்கிய 20 பேர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளனர் என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.**

பெற்றோலிய வளங்களைத் தனியார் மயப்படுத்தும் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன்த்தின் பல தொழிற் சங்கங்கள் தமது கடமைகளில் இருந்து விலகியுள்ளன.

இந்த உத்தியோகபூர்வமற்ற வேலை நிறுத்தம் காரணமாக எரிபொருள் பவுஸர்களுக்கு எரிபொருள் ஏற்றுவதும் நிறுத்தப்பட்டுள்ளதுடன் பல பிரதேசங்களில் எரிபொருள் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் விநியோகப் பணிகளில் ஈடுபட்டு வரும் ஊழியர்களுக்கு அழுத்தம் கொடுத்து தொழிற்சங்க தலைவர்கள் எரிபொருள் விநியோக சேவைகளை முடக்கியுள்ளனர்.

அந்தவகையில் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் ஊழியர்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கும் வகையில் தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் கட்டாய விடுமுறை அளிக்கப்படும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதேவேளை எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட தாமதம் வழமைக்குத் திரும்பியுள்ளது என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். (ச-இ)

# தொழிற்சங்கப் போராட்டம்; மீள எரிபொருள் வரிசைகள்

கொழும்பு, மார்ச் 30
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கப் போராட்டம் காரணமாக நேற்று முன்தினம் நாடுமுழுவதுமுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்டவரிசைகள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்க உறுப்பினர்கள் சிலர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பெற்றோலிய வழங்கலைத் தனியார் மயப்படுத்தும் அரசின் முடிவுக்கு எதிராக இந்த வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த வேலைநிறுத்தம் முடிவுக்கு வராவிட்டால் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் விநியோகத்தில் சிக்கல் ஏற்படும்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் நீண்ட வரிசைகள் காணப்பட்டன.

பல எரிபொருள் நிலையங்களில் கையிருப்பு தீர்ந்து விட்டது என எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# தமிழரசுவின் தலைமையை 5 வருடங்களுக்கு ஏற்கேன்!

## சிறீதரன் கூறினாரென சுமந்திரன் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 30
அடுத்த 5 வருடங்களுக்கு கட்சியின் எந்தவொரு பொறுப்பையும் ஏற்கேன் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கூறியுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் முடிவுற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில், "அனைவரும் சேர்ந்து என்னிடம் கேட்டால் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையை ஏற்கத் தயார்" எனக் கூறினார்.

அவர் கூறுவதைப் போல் அனைவரும் அவரைத் தலைவராகும்படி கேட்டால் எனது ஆதரவும் அவருக்கு உண்டு. இப்பொழுதும் அதே நிலைப்பாட்டிலேயே இருக்கிறேன்.

அதைத்தொடர்ந்து நடந்த முதலாவது மத்திய குழுக் கூட்டத்தில் "நான் அவ்வாறு கூறியது தவறு. அதனால் தலைவருக்கு ஏதாவது சங்கடம் ஏற்பட்டால் மன்னிப்புக் கோருகிறேன்" என சிறீதரன் தெரிவித்தார். அத்துடன் 5 வருடங்களுக்கு எந்தப் பொறுப்பையும் தான் ஏற்கப் போவதில்லை என்றும் கூறினார் - என்றார். (ச)

# இன – மத வன்முறைக்கு அரசாங்கம் இடமளிக்காது

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 30
துஷ்டர்களால் சின்னாபின்னமாக்கப்பட்ட நெடுங்கேணி ஆதிசிவன் ஆலயம் விரைவில் மீண்டும் அமைக்கப்படும். அதற்கு ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் ஆதரவாக இருப்பார்கள் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

கிளிநொச்சி நகர பேருந்து நிலையத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்;
இன - மத ரீதியான வன்முறைகளுக்கு தற்போதைய அரசாங்கம் இடமளிக்காது. துஷ்டர்களால் சின்னாபின்னமாக்கப்பட்ட நெடுங்கேணி ஆதிசிவன் ஆலயம் விரைவில் மீண்டும் உருப்பெறும். அதற்கு ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

நெடுந்தீவு வெடியரசன் கோட்டைப் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட தொல்லியல் சின்னம் பற்றிய அறிவிப்புப் பலகை தொடர்பில் உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடிய நிலையில் அந்த அறிவிப்புப் பலகை தற்போது நீக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கைப் போக்குவரத்துச் சபையினரும் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினரும் ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலமே மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கக் கூடியதாக இருக்கும்.

மக்கள் சேவையை கருத்திற்கொள்ளாது இலாபமீட்டும் நோக்கில் செயற்படுவதாலேயே பிரச்சினைகள் எழுகின்றன. அதனால் பாதிப்பை எதிர்நோக்குவது மக்களே. இதனையறிந்து பொறுப்புணர்வுடன் அனைவரும் செயற்பட வேண்டும் - என்றார். (ச-இ)

# 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நிஜமாக 29 • 09 • 1941



நிழலாக 15 • 03 • 2008

## அமரர் ஆறுமுகம்பிள்ளை சுப்பிரமணியம் (மணியம்)

விநாயகர் ஸ்ரோர்ஸ் ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
(முன்னாள் பங்குதாரர் - குகன் ஸ்ரோர்ஸ். குகன் எரிபொருள் நிலையம். மீனாட்சி அரிசி ஆலை)

நித்தம் உன்னை வணங்குவதால
நீ எங்கள் குலசாமி அப்பா !!!!

சிந்தையெல்லாம் உன்
கனவுகளை புதைத்ததால்
தினமும் எங்களுள் நடமாடும்
சாமி நீ அப்பா!!!

ஏங்கித் தவிக்கும் போது
எங்கள் உள்ளம் தேடும்
இனியவன் நீ அப்பா !!!

வருடங்கள் பல கோடி
ஓடினாலும் எங்கள்
உயிருக்கு நெருக்கமானவன்
நீ அப்பா !!!

உன் அணைப்பும்
கத கதப்பும் தரும் பலம்
உலகில் கிடைக்காத
பொக்கிஷம் அப்பா !!!



எத்தனை சிகரங்கள் தொட்டாலும்
அத்தனையும் உனக்கே
சமர்ப்பணம் அப்பா !!!

நினைக்கும் நொடியெல்லாம்
எங்களுக்குள் பொங்கி வரும்
கண்ணீராய் வாழ்கின்றாய் அப்பா !!!

வருவாயா மீண்டும்
எங்கள் குடும்பத்திற்குள்
வசந்தமாய் அப்பா !!!

உன்னை நேசிக்கவில்லை
சுவாசிக்கின்றோம் அப்பா !!!

"மணியம் வாசம்"
144/3, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் அன்புடன்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரன்.

(cs.22575) (N- 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இன்றைய நாள்

## (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சில சங்கடங்கள் ஏற்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். திடீர் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** அனுகூலமான நாள். முயற்சிகள் சாதகமாகும். செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உடல் நலனில் கவனம் தேவை. சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம் :** புதிய முயற்சிகள் சாதக மாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். லாபம் ஏற்படும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூல மாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமா கும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். ஆதாயமும் கிடைக்கும். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பா ராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பது டன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். எதிர்ப்பு நீங்கும். சிறு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோ சனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பெருமை உண்டாகும். செலவுகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூல மான நாள். உடல் ஆரோக்கியம் மேம்படும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. திடீர் செலவுகள் ஏற்படும். நன்மைகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிளைப் தொடங்கு வது நல்லது. உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். பிள்ளைகள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு. சிலருக்கு இளைய சகோதரரால் சங்கடங்கள் ஏற்படும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் மேலோங்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள். மகிழ்ச்சியும் உற்சாகமும் கிடைக்கும். ஒத்துழைப்பால் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும்.

# வெடிகுண்டுகளுக்கு 700 குழந்தைகள் இரை!

## ஆப்கானிஸ்தானில் சோகம்

காபூல், மார்ச் 30

ஆப்கானிஸ்தானில் கடந்த ஆண்டு போரில் பயன்படுத்தப்பட்டு வெடிக்காத நிலையிலுள்ள குண்டுகள் மற்றும் வெடி பொருள்கள் ஆகியவற்றால் 700க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்துள்ளனர் என யுனிசெவ் அமைப்பு வேதனை தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் அரசுக்கு எதிரான போரில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். தற்போது தலிபான்கள் தலைமையிலான ஆட்சியில் பல புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன.

போரால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தானில் வறுமை மற்றும் வேலையின்மை ஆகியவற்றால் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தநிலையில் யுனிசெவ் அமைப்பு தனது ருவிற்றர் பதிவில்,

கடந்த 2022ஆம் ஆண்டில் போரில் பயன்படுத்தப்பட்டு வெடிக்காத நிலையில் உள்ள குண்டுகள், வெடிபொருள்கள் ஆகியவற்றால் 700க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

அவற்றை எடுத்து அவர்கள் விளையாடிய போதும், உலோகத் துண்டுகளை எடுத்து விற்பதற்காகச் சேகரித்தபோதும் இந்த அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன. பொதுமக்களுக்கு இதுபற்றிய தெளிவின்மை காணப்படுகிறது என அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# ஈஸ்டர் தாக்குதலின்போதே இறந்துவிட்டார் புலஸ்தினி!

கொழும்பு, மார்ச் 30

இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின்போது சாரா என்று அறியப்படும் புலஸ்தினி மகேந்திரன் உயிரிழந்துள்ளார் என்று டி.என்.ஏ. பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஈஸ்டர் தாக்குதல்கள் நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி புனித செபஸ்ரியார் தேவாலயத்திலும் நடத்தப்பட்டன, பலர் உயிரிழந்தனர். தாக்குதல்தாரியின் மனைவியே சாரா என்று அறியப்படும் புலஸ்தினி மகேந்திரன் ஆவார். அவருக்கு என்ன நடந்தது? அவர் இப்போது எங்கே? தப்பிச்சென்று விட்டாரா? என்ற பல கோணங்களில் விசாரணைகள் இடம்பெற்று வந்தன. இந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துவிட்டார் என்று டி.என்.ஏ. பரிசோதனைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

வெடியரசன்...

இந்தச் செயற்பாட்டைக் கண்டித்தே முன்னணியினர் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் இடம்பெற்றபோது பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பூரில் இந்தியாவின் சூரிய மின்நிலையம்

கொழும்பு, மார்ச் 30

இலங்கை மின்சாரசபை மற்றும் இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து திருகோணமலை சம்பூரில் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர சமர்ப்பித்த இந்த யோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

அதிகரித்துவரும் மின் தேவையை பூர்த்தி செய்ய திருகோணமலை, சம்பூர் பகுதியில் அனல் மின் நிலையம் அமைக்க இந்தியா - இலங்கை அரசாங்கங்களிடையே 2011 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் கைச்சாத்தானது.

எனினும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்திய நிலையில் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

இந்தநிலையில் சம்பூர் அனல் மின் நிலையம் நிர்மாணிக்கப்படவிருந்த அதேயிடத்தில் 135 மெகாவாட் சூரியசக்தி திட்டத்தை 2 கட்டங்களாக நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

திட்டத்தின் முதற்கட்டமாக 42.5 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் 50 மெகாவாட் சூரிய மின்சக்தித் திட்டம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இரண்டாம் கட்டமாக, 72 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் 85 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின் கட்டமைப்பு நிர்மாணிக்கப்படவுள்ளது.

இரண்டு கட்டங்களின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை விநியோகிப்பதற்காக 42 மில்லியன் டொலர் செலவில் கப்பல் துறையிலிருந்து ஹபரண வரை 220 கிலோவோட் திறன் கொண்ட 76 கிலோமீற்றர் நீளமான விநியோக கட்டமைப்பு அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை 2024 முதல் 2025 வரை இரண்டு ஆண்டுகளுக்குள் நிறைவுறுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (ச-இ)




# உண்மைகள் வெளிக்கொணராவிடத்து உண்மையைக் கண்டறியும் குழு ஏன்?

## அம்பிகா சற்குணநாதன் கேள்வி



கொழும்பு, மார்ச் 30

இலங்கையில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான உண்மையைக் கண்டறிய மேலும் ஒரு குழுவை நியமிப்பதானது கேலிக்குரிய செயலாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தக் குழுவுக்கு அவசியமில்லை.

இவ்வாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கையில் பல ஆண்டுகளாக பல்வேறு ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றின் அறிக்கைகளும் வெளியாகியுள்ளன.

அந்த அறிக்கைகளில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் எவற்றையும் இது வரை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை - நீதியை வழங்கவில்லை.

இந்தநிலையில் புதிதாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கு ஆலோசிக்கப்படுகிறது.

இதற்கென இன மற்றும் நிறவெறியில் இருந்து தென்னாபிரிக்கா எவ்வாறு மீண்டது என்பது தொடர்பாகவும் இதற்காக தென்னாபிரிக்கா அமைத்த 'உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு' தொடர்பாகவும் புரிதல்களை ஏற்படுத்திக்கொள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச ஆகியோர் தென்னாபிரிக்கா பயணித்துள்ளனர்.

தென்னாபிரிக்காவின் மாதிரியை ஒத்த உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை இங்கு அமைப்பது ஏற்புடையதல்ல - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய நிதியத்தினுடைய நிபந்தனைகள் பயங்கரமானது

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

**கொழும்பு, மார்ச் 30**

**சர்வதேச நாணய நிதியத்தால் அண்மைக்காலத்தில் முன்வைக்கப்பட்ட மிக மோசமான நிபந்தனைகளே இலங்கை விவகாரத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைத்த கடனை சிலர் புதையல் கிடைத்துவிட்டதுபோல கருதுகின்றனர். சர்வதேச நாணய நிதிய க்கடன் என்பது பயங்கரமானது. இந்த உண்மை தெரிந்திருந்தால் பட்டாசு கொளுத்தியிருக்கமாட்டார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்ற எந்தவொரு நாடும் முன்னேறியது கிடையாது. பணவீக்கம் அதிகரிப்பு, கடனை மீளச் செலுத்தமுடியாமை உள்ளிட்ட விடயங்களால் பாதிக்கப்பட்டிருந்த நாடொன்று சர்வதேச நாணய நிதிய கடனால் எங்கும் மீண்டுள்ளதா? கடனுக்காக மிக மோசமான நிபந்தனைகளையே நாணய நிதியம் முன்வைத்துள்ளது - என்றார். (ம-44)

# இந்திய மீனவர்களை விடுவிக்க பேச்சு நடத்தவேண்டும் மோடி!

## ஸ்டாலின் வலியுறுத்து

சென்னை, மார்ச் 30

இலங்கைக் கடற்படையால் அண்மையில் கைதுசெய்யப்பட்ட 28 இந்திய மீனவர்களையும் விடுவிக்க பிரதமர் மோடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரு தரப்பு இராஜதந்திர பேச்சுக்களின் பின்னரும் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. இவ்வாறு கைது செய்யப்படும் மீனவர்கள் தாக்குதலுக்கும் சித்திரவதைகளுக்கும் ஆளாகின்றனர்.

பாக்குநீரிணையில் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதை முற்றாக நிறுத்துவதற்கு பிரதமர் நரேந்திரமோடி ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் மீன்பிடிப் படகுகள் மீனவர்களின் வாழ்வாதாரத்துடன் பின்னிப்பிணைந்த விடயம். எனவே, தற்போது இலங்கைச் சிறையிலுள்ள 28 இந்திய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிப்பதற்கு பிரதமர் நரேந்திரமோடி நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ம-6)

# சிறுமி மீது பாலியல் சேட்டை சந்தேகநபரைக் கைதுசெய்க!

## பொதுமக்கள் வலியுறுத்து

வவுனியா, மார்ச் 30

சிறுமியொருவர் மீது பாலியல் சேட்டை புரிந்த இளைஞனை கைதுசெய்யுமாறு பொதுமக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இளைஞர் ஒருவர் 14 வயதுச் சிறுமிக்குப் பாலியல் ரீதியிலான துன்புறுத்தலை வழங்கினார் என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டது. சந்தேக நபரான இளைஞன் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவரைக் கைதுசெய்யுமாறு கிராம மக்கள் ஒன்றிணைந்து பொலிஸாரிடம் வலியுறுத்தியுள்ளனர். கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை ஒன்றுகூடி தமது கோரிக்கையை மக்கள் முன்வைத்தனர்.

இதையடுத்து இளைஞன் விரைவில் கைதுசெய்யப்படுவார் என்று பொலிஸார் வழங்கிய வாக்குறுதியை அடுத்து மக்கள் கலைந்து சென்றனர். (ச-110)

# ஐந்து வயதுச் சிறுவனுக்கு ஞானக்குழந்தை விருது

யாழ்ப்பாணம், மார்ச் 30



யாழ்ப்பாணத்தில் ஐந்து வயதுச் சிறுவனுக்கு 'ஈழத்து ஞானக்குழந்தை' எனும் விருது முதன்முதலாக வழங்கப்பட்டுள்ளது.

உருத்திரசேனை அமைப்பின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் திருவுருவ வெளியீட்டு விழா, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவரின் புதல்வனான அருணன் கலந்துகொண்டு 'திருவள்ளுவரின் ஆதங்கம்' எனும் கருப்பொருளில் திருவள்ளுவர் குறள் மற்றும் அதன் விளக்கம் என்பன வற்றை எடுத்துரைத்தான்.

அதனைத்தொடர்ந்து இந்து சமய விழுமியங்களை நிலைநிறுத்தி பல்வேறு சமய சார் சொற்பொழிவுகளையும் ஆற்றினான். ஐந்து வயதான சிறுவனின் அதீத ஆற்றலை அனைவரும் பாராட்டினர். அதனையடுத்தே உருத்திரசேனை அமைப்பு சிறுவனுக்கு 'ஈழத்து ஞானக் குழந்தை' எனும் விருது வழங்கிக் கௌரவித்தது.

நிகழ்வில் விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா கலந்துகொண்டு சிறுவனைப் பாராட்டினார். (ம-14)

# மரபுசார் உணவு தொடர்பில் மன்னாரில் விழிப்புணர்வு

மன்னார், மார்ச் 30

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மரபுசார் உணவுகள் தொடர்பான விழிப்புணர்வு , இலுப்பைக்கடவை தமிழ் வித்தியாலயத்தில் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை இடம் பெறவுள்ளது.

பாலியாறு, இலுப்பைக்கடவை, பறங்கிகமம், கள்ளியடி, சவிரிகுளம், இத்திக்கண்டல், வேட்டையான்முறிப்பு ஆகிய மாதர் சங்கங்கள் தங்களது மரபுசார் உணவுப் பொருள்களை காட்சிப்படுத்தவுள்ளதுடன் மரபுசார் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வு மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட மரபுசார் உணவுகளின் மகத்துவத்தை உணர்த்துவதும், அவற்றை எதிர்கால சந்ததிக்கு அறிமுகப்படுத்தவும், ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-14,60)

# இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைகள் ஏப்ரல் மாதம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்படும் 2023ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி முதல் மே மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளன என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

பரீட்சையில் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாத்திரம், 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இலக்கணம், 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு உரைநடை, பிற்பகல் 1 மணிக்கு வரலாறு, மே முதலாம் திகதி திங்கட்கிழமை 9 மணிக்கு இலக்கியம் ஆகிய பாடங்கள் இடம்பெறவுள்ளன. பரீட்சைகள் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளன. பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் ஏப்ரல் 2 ஆம் வாரம் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-14)

# மதுபானம், புகையிலை வரி உயர்த்த தீர்மானம்

கொழும்பு, மார்ச் 30

எதிர்வரும் ஜூன் மாதம் முதல் மதுபானம் மற்றும் புகையிலை மீதான வரியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்துக்கமைய இந்த வரி அதிகரிப்பு செய்யப்படவுள்ளது.

அதற்கமைய 2025ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வரி வருவாயை 15 சதவீதமாக உயர்த்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மேலும் நாடுமுழுவதும் சொத்து வரியை அறிமுகப்படுத்தவும் நிதி பரிமாற்றங்களை மதிப்பாய்வு செய்யவும், வரி இல்லாத கொடுப்பனவு மற்றும் குறைந்தபட்ச விலக்குகளுடன் பரிசு மற்றும் பரம்பரை வரியை நடைமுறைப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தின் பிரதம அதிபராக தேவராஜா சர்மா சுரேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் கொழும்பு, மருதானை, கொட்டகலை, சீனன்குடா, திருகோணமலை, மட்டக்களப்பு, செட்டிக்குளம், மாங்குளம், சுன்னாகம் ஆகிய ரயில் நிலையங்களில் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பொதுஎதிரியும் ஒன்றுபடுதலும்

கடந்த ஆண்டு இந்தநாட்டின் ஆட்சியையே புரட்டிப்போட்ட – இலங்கையின் வரலாற்றில் புதிய அத்தியாயம் எழுதிய 'அரகலய' போராட்டம் நடந்தேறியது. காலிமுகத்திடலில் தொடர்ச்சியாக இடம்பெற்ற இந்தப் போராட்டம் தென்னிலங்கையில் பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்து இறுதியில் ஜனாதிபதியாக இருந்த கோத்தாபய ராஜபக்சவை பதவியில் இருந்தும், நாட்டை விட்டும் ஓட வைத்தது. 'கோத்தா கோ கம'வில் தொடர் போராட்டங்கள் நடந்துகொண்டிருந்த காலப் பகுதியில் அதில் தமிழ் மக்களின் பங்கேற்பு மிகக் குறைவாகவே இருந்தது. இதனால் போராட்டக்கள ஏற்பாட்டாளர்கள் தமிழ் மக்களை வளைத்துப்போடுவதற்கு பல பிரயத்தனங்களைச் செய்தார்கள், குறிப்பாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக் கடைப்பிடித்தார்கள். அதேபோன்று தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பிலும் இடையிடையே பேசினார்கள். சில தமிழ்த் தலைவர்கள் அவர்களது இந்தப் பசப்புக்களை நம்பி அங்கு சென்றது மாத்திரமல்லாது, தமிழ் மக்கள் இந்தப் போராட்டங்களில் பங்கேற்கவேண்டும் என்றும் கோரினார்கள்.

இந்த 'அரகலய' போராட்டத்தில் முன்னணியில் செயற்பட்டவர்தான் வசந்த முதலிகே. அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளரான அவர், இப்போது வடக்குக்கு அடிக்கடி வருகிறார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தையும் தமது அடுத்த கட்டப் போராட்டத்துக்குள் இணைப்பதற்கு பெரும் பிரயத்தனம் செய்கிறார். ஆனால், தமிழர் தாயகத்தில் கடந்த ஒருமாத காலத்துக்குள் திடீரென கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள பௌத்த மயமாக்கலுக்கு எதிராக – தொல்லியல் திணைக்களத்தின் அடாவடிக்கு எதிராக – குரல் கொடுப்பதற்கு அவர் தயாரில்லை. கடந்த ஆண்டு நாட்டுமக்கள் அனைவருக்காகவும் போராடிய அரகலய கூட்டம் கூட தமிழ் மக்களை இனரீதியாக நசுக்கும் இந்தச் செயற்பாட்டுக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தயாரில்லை. அவ்வளவு ஏன், தென்னிலங்கையில் எதிர்க்கட்சிகளாக இருக்கும் மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி , சிறிலங்கா சுதந்திரக் கட்சி சிறிலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறி டலஸ் அழகப்பெரும தலைமையில் சுயாதீனமாக இயங்கும் அணி என்பனவும் வெடுக்குநாறிமலை அநியாயத்துக்கு எதிராக வார்த்தையேனும் உதிர்க்கவில்லை.

தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புக்கு தென்னிலங்கை சக்திகள் எல்லாம் ஓரணியில் நிற்கின்றன என்பதைத்தான் இந்தச் சம்பவங்கள் புடம் போட்டுக் காட்டுகின்றன. இந்த தென்னிலங்கைச் சக்திகளுக்கு, ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மாத்திரம் தமிழ் மக்களின் ஆதரவு தேவை. அத்தோடு அவர்களின் தேவை முடிந்ததும், மீண்டும் இனவாத முருங்கை மரத்தில் ஏறிவிடுவார்கள். இந்தத் தென்னிலங்கைக் கட்சிகளுக்கு குடைபிடிக்க தமிழர் தேசத்திலும் இன்னமும் ஆள்கள் இருக்கின்றார்கள், அந்தத் தென்னிலங்கை கட்சிகள் சார்பில் இங்கு போட்டியிடுபவர்களும் இருக்கின்றார்கள். அவர்களுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்தும் இருக்கிறார்கள் எமது மக்கள். எங்கள் கைகளால் எங்கள் கண்களைக் குத்தியிருக்கின்றோம் என்பதை இப்போதாவது எம் மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். தமிழருக்கு எதிரான அழிப்புக்கு சிங்களதேசம் தனக்கு இடையிலான வேறுபாடுகளைக் களைந்து எப்படி ஒன்றிணைகின்றதோ அதைப்போல பொது எதிரிக்கு எதிரான போராட்டத்திலும் தமிழர்தேசம் தங்கள் வேற்றுமைக்ளைக் களைந்து களமாடவேண்டும். எதிரி பலமானவனாக இருக்கும்போது நாம் சிறு சிறு துண்டுகளாகப் பிளவுபட்டு நின்றால் வெற்றிபெற முடியாது என்ற பாடத்தை உணர்ந்து செயலாற்றுவோம்.

நாளொரு நல்வார்த்தை

"கடமைகளை வெற்றி, தோல்வி பாராமல் தொடர்ந்து செய்து கொண்டே இருந்தால் புதிய பாதை நமக்காகத் திறந்தே இருக்கும்"

– அப்துல்கலாம்




## தமிழரின் தேசியத்தைச் சிதைக்க அடிவருடி சக்திகள் களமிறக்கம்

### முறியடிக்காவிடின் அழிவு நிச்சயம்; அருட்தந்தை மா.சக்திவேல் எச்சரிப்பு

**வவுனியா, மார்ச் 30**

**வெடுக்குநாறிமலையிருந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் தகர்த்தெறியப்பட்டமை சைவத் தமிழ் மக்களை பலவந்தமாக வன்முறைக்கு இட்டுச் செல்லும் திட்டமிட்ட இனவாத அரசியலாகும். இதற்குப் பின்னாலுள்ள அடிவருடிகளை இனங்கண்டு முறியடிக்காதுவிடின் இன்னுமொரு பயங்கர முள்ளிவாய்க்கால் அழிவை தமிழர்கள் சந்திக்க நேரிடும்.**

இவ்வாறு சமூக நீதிக்கான செயற்பாட்டாளர் அருட்தந்தை மா.சக்திவேல் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

அரசியல் சக்திகள் தமிழர்களின் தேசியத்தைச் சிதைக்க களமிறக்கப்பட்டுள்ளன. சைவர்களின் வழிபாட்டுத் தலங்களைச் சிதைப்பதும் பக்திச் சின்னங்களை உடைத்தெறிவதும் தற்போது தொடர்ச்சியாக தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கினை சிவபூமியாக சித்திரிக்கும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக ஆனையிறவில் நடமாடும் சிவன் உருவச் சிலை வைக்கப்பட்டுள்ளது. அன்று ஆனையிறவை விடுதலைப்புலிகள் உயிர்த்தியாகத்தோடு கைப்பற்றியபோது இருந்த மகிழ்ச்சி நடமாடும் சிலை வைக்கப்பட்டபோது ஏற்படவில்லை. வடக்கு, கிழக்கில் எந்தவொரு பெரும் சலசலப்பையும் ஏற்படுத்தவுமில்லை. இதற்கு மத்தியில் திருவள்ளுவர் இந்துவா? இல்லையா? எனும் பட்டிமன்றமும் நீண்டு செல்கின்றது.

போர் வெற்றியை மீண்டும் அடையாளப்படுத்தும் முகமாக முப்படைகளின் தளபதி சவேந்திர சில்வா, தாதுகோபுர திரை நீக்கத்துக்கு சிங்கள நடனத்தோடு அழைத்து வரப்படுகின்றார். இதன் தொடர்ச்சியாகவே கச்சதீவில் களவாக புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. இது மதத்தவர்களை பிரித்துவிட்டு அரசியல் குளிர்காயும் தந்திரமும் ஆகும்.

வடக்கு - கிழக்கு அரசியல் தலைவர்கள் அரசியல் தெளிவோடு சமயத் தலைவர்களையும் இணைத்துக்கொண்டு பயணிக்கவேண்டும். இல்லையெனில் தமிழர்கள் இன்னுமோர் அழிவையே சந்திப்பர் - என்றார். (ச-110)

## கிராமங்களுக்குச் செல்லும் நாடாளுமன்ற சேவைகள்

### ஜனாதிபதி நடைமுறை

கொழும்பு. மார்ச் 30

கிராமங்களுக்கு நாடாளுமன்றத்தின் சேவையை நேரடியாக எடுத்துச் செல்லும் புதிய வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் மக்களுக்கு உள்ள அதிருப்தியைத் தவிர்க்கும் வகையில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அந்தவகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் காலடிக்குச் சென்று ஆற்றும் வேலைகளை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதும் அவர்களின் யோசனைகளை உள்வாங்கி செயற்படுவதுமே இதன் நோக்கமாகும்.

இந்த வேலைத்திட்டப் பொறுப்பை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் ஜனாதிபதி ஒப்படைத்துள்ளார். (ச-22)

நாளை

31.03.2023

வெள்ளிக்கிழமை

பங்குனி 17

சுபநேரம் : 06.12 – 07.42

ராகுகாலம் : 10.42 – 12.12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு விரைவில் விசேட செயற்றிட்டம்

## ஒத்துழைப்பு வழங்க முன்வருமாறு யாழ்.மாவட்டச் செயலர் கோரிக்கை

**யாழ்ப்பாணம், மார்ச் 30**

**யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் இடம்பெறும் குற்றச்செயல்களை எவ்வாறு தடுப்பது? அதில் மறைமுகமாகவும் நேரடியாகவும் ஈடுபடுபவர்களை எவ்வாறு இனம்காண்பது? அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது ஆகியவை குறித்து வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கு அந்தந்த கிராமமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.**



இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் நலிவுற்று மக்களுக்கான இலவச அரிசிப் பொதி வழங்கும் மாவட்ட மட்ட நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இன்று யாழ்.மாவட்டம் குற்றச்செயல்களால் நிறைந்துவிட்டது எனப் பலரும் முகம்சுழித்து வேதனை அடைகின்றனர். யாழ். மாவட்டத்தின் குற்றச்செயல்கள் தொடர்பில் நாளுக்கு நாள் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்த வண்ணமே உள்ளன.

நீங்கள் உங்களுடைய பிள்ளைகளில் கவனம் செலுத்தவில்லை என்றால் உங்களுடைய குடும்பம் மட்டுமன்றி இந்த நாடே சீரழிந்துவிடும் நிலைமை ஏற்படும்.

வறுமையில் வாடுகின்ற குடும்பங்களில் இருந்தும் போதைப்பொருள் பாவனையாளர்கள் கண்டறியப்படுகிறார்கள். அந்தக் குடும்பங்களை சென்று பார்த்தால் அங்கே வறுமை இருக்கிறது. வசிப்பதற்கு போதிய வீடு இல்லாது ஒருவேளை உணவு இன்றி கஷ்டமான நிலை காணப்படுகிறது எனக் கூறுகிறார்கள். ஆனால் போதைப்பொருளுக்கு செலவழிப்பதற்கு எங்கிருந்து பெருந்தொகை பணம் கிடைக்கப்பெறுகிறது? இதற்கு பின்னாலுள்ள ரகசியங்கள் களையப்பட வேண்டும்.

ஒரு குடும்பம் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பமா? அந்தக் குடும்ப உறுப்பினர்களுக்கு பணம் எவ்வாறு கிடைக்கப்பெறுகிறது என்ற விவரங்கள் சேகரிக்கவேண்டும். உரிய தகவல்களை உரிய தரப்பினருக்கு வழங்க வேண்டும். உங்களுடைய பிரதேசங்களில் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை இனங்காண மக்கள் ஒத்துழைப்பு மிக அவசியம். பொலிஸாருக்கோ அல்லது பிரதேச செயலகத்துக்கோ அல்லது சமூகசேவை உத்தியோகத்தருக்கோ அல்லது வேறு யாருக்காவது இந்த தகவல்களை தெரிவித்து உங்களுடைய கிராமங்களில் இடம்பெறும் குற்றங்களை தடுக்க வழிவகுக்க வேண்டும். அப்போதுதான் நிம்மதியான ஆரோக்கியமான சிறந்த சமுதாயத்தில் உள்ளவராக நீங்கள் மாற முடியும்.

அதற்கமைய ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் இந்தக் குற்ற செயல்களை எவ்வாறு தடுப்பது, இதில் மறைமுகமாகவும், நேரடியாகவும் ஈடுபடுபவர்களை எவ்வாறு இனம்கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான வேலைத் திட்டம் தொடர்பில் கலந்துரையாடி வருகின்றோம்- என்றார். (ச-125)

## இளங்கலைஞர் மன்றத்தின் 53 ஆவது ஆண்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றத்தின் 53ஆவது ஆண்டு இசைவிழாவும் தங்கப்பரிசு கலைப்போட்டிகளும் மன்றத்தின் கலாமண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையான மூன்று நாள்கள் இடம் பெறவுள்ளன.

முதல் நாளான நாளை வெள்ளிக் கிழமை, இசை நிகழ்வுகள் யாவும் மாலை 4.30 மணிமுதல் இரவு 8 மணி வரை யாழ்ப்பாணம் இராமநாதன் அழகியல் கற்கைகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இரண்டாவது நாளான ஏப்ரல் 2ஆம் திகதி சனிக்கிழமை கலைப்போட்டிகள் காலை, மாலை என இரு பிரிவுகளாக இடம்பெறவுள்ளன.

காலை நிகழ்வுகள் காலை 9மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையிலும் மாலை நிகழ்வுகள் மாலை 4.30 மணி முதல் இரவு 8 மணி வரை ஈழத்தின் புகழ்பூத்த வயலின் கலைஞர் "சுருதி வேந்தன்" அம்பலவாணர் ஜெயராமன் தலைமையிலும் இடம்பெறவுள்ளன.

3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நிகழ்வுகள் காலை 9 மணி முதல் நல்லூர் சாரங்கம் இசைமன்ற இயக்குநர் இசைக்கலைமணி வாசஸ்பதி றஜீந்திரன் தலைமையிலும் மாலை நிகழ்வுகள் மாலை 4.30 மணி முதல் இரவு 8 மணி வரை தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி, செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்று நிறைவு பெறும் என்று விழா ஏற்பாட்டக்குழு அறிவித்துள்ளது. (ஒ-14)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி!

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ். மாவட்டத்தில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. சுகாதாரத் திணைக்களத்தால் இந்தத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இலவசமாக முன்னெடுக்கப்படுகின்றன. யாழ். மாவட்டத்தில் விலங்கு விசர்நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக உங்கள் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றி ஒத்துழைப்பு வழங்குங்கள் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ச)

# கைவிடப்பட்ட கால்நடைகளை காக்க வடக்கில் காப்பகங்கள்!

## பொதுநிறுவனங்கள் முன்வருமாறு ஆளுநர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

உரிமையாளர்களால் கைவிடப்பட்ட கால்நடைகளை பராமரிக்க வடக்கு மாகாணம் எங்கும் தேவைக்கேற்ப காப்பகங்கள் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கால்நடை பாதுகாப்பு காப்பகங்களை அமைத்து பராமரிக்க விரும்பும் பொது நிறுவனங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் [illegible] கொண்டு வரப்பட்டது [illegible] உரிமையாளர்களால் கைவிடப்பட்ட கால்நடைகள் பல கட்டாக்காலிகளாக பொது இடங்களில் அலைந்து திரிவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இத்தகைய கால்நடைகள் வீதிகளில் விபத்துக்குள்ளாகி இறப்பதும் நோய்வாய்ப்பட்டு மரணிப்பது மட்டுமன்றி, விவசாய மற்றும் பயிர்ச்செய்கை நிலங்களில் பயிர்களை நாசமாக்கி விவசாயிகளுக்குப் பொருளாதாரப் பாதிப்புக்களையும் ஏற்படுத்துகின்றன.

சில சந்தர்ப்பங்களில் கால்நடைகள் திருடப்பட்டு இறைச்சியாக்கப்படும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. அந்தவகையில் அவற்றுக்கு உரியமுறையில் உணவளிக்கவும் [illegible] பாதிப்படைவதைத் தடுக்கும் [illegible] கால்நடைகளுக்கான காப்பகங்களை வடமாகாணம் எங்கும் அமைத்து பராமரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தீர்மானத்துக்கமைய ஆளுநர் செயலகத்தால் பிரதேச செயலகங்களுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய 22 பிரதேச செயலகங்கள் தமது பகுதிகளில் பொருத்தமான காணிகளை அடையாளப்படுத்தி விவரங்கள் அனுப்பி வைத்துள்ளன.

அதற்கமைய கால்நடைகளுக்கான பாதுகாப்புக் காப்பகங்களை விரும்பிய பகுதிகளில் அமைத்துப் பராமரிக்க விரும்பும் சமய ஸ்தாபனங்கள், தொண்டு நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மிருகவதைக்கு எதிரான இயக்கங்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துடன் தொடர்புகொண்டு விருப்பத்தை தெரிவித்து ஒத்துழைப்பை வழங்கலாம் - என்றுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியாவில் தடம்பதிப்பதற்கு தேசிய இனக்கப்பாடு தேவை

### வஜிர அபேவர்த்தன சுட்டிக்காட்டு

நாட்டில் தேசிய இணக்கப்பாடு இருந்தால் மட்டுமே இலங்கையால் ஆசியாவில் சிறந்த நிலைமைக்கு வரமுடியும். அவ்வாறில்லாது அரசியல் நோக்கில் செயற்பட்டால் கீழ்நோக்கித்தான் செல்லவேண்டும் - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

இலங்கை முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால் தேசிய இணக்கப்பாடு அவசியம். வெறுமனே அரசாங்கத்தை குறைகூறுவதால் மாத்திரம் நாட்டைக் கட்டியெழுப்பிவிட முடியாது. இனியும் தனிக்கட்சி ஆட்சிமுறை ஏற்புடையதாக இருக்காது. எந்தக் கட்சியாக இருந்தாலும் இதுவேதான் நிலைமை. ஆகவே தேசிய இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள அனைத்துக் கட்சிகளும் முன்வரவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இன்னும் 12 ஆண்டுகள் ஆட்சியை ஒப்படைத்தால் இலங்கை சிறந்த நிலையை எட்டும். குறுகிய காலப்பகுதிக்குள் பல மாற்றங்களை நிகழ்த்தி சாதித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தலை விடுத்து நாட்டை மீட்டெடுப்பதே முக்கியமாகும். அதற்கான வேலைத் திட்டங்களே முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (ச-44)

## வெடுக்குநாறி மலை கூகுளில் 'வட்டமான பர்வத விகாரை'

வவுனியா வெடுக்குநாறி மலையிலுள்ள ஆதிசிவன் ஆலயம் தகர்த்தெறியப்பட்டதைத் தொடர்ந்து ஆதிசிவன் ஆலயத்துக்கு 'வட்டமான பர்வத விகாரை' எனும் பெயர் கூகுளில் காட்டப்பட்டுள்ளது. தொல்பொருள் திணைக்களம் மற்றும் பொலிஸார், பாதுகாப்புத் தரப்பினரின் முழுமையான கண்காணிப்பில் இருந்த வெடுக்குநாறி மலையில் ஆதிசிவன் லிங்கம் தகர்த்தெறியப்பட்டுள்ளதுடன் அதனைச் சூழ இருந்த ஏனைய தெய்வங்களின் விக்கிரகங்களும் சிதைக்கப்பட்டு ஆலயம் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக கூகுளில் குறித்த ஆலயம் இருந்த வெடுக்குநாறி பகுதி 'வட்டமான பர்வத விகாரை' என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புராதன பௌத்த ஆலயமாகக் காட்டப்பட்டுள்ளது. (ச-இ)


சாமர்த்தியமான தீர்வுகளை கொண்டு வருகிறது...



யாழ் பொது நூலகம் பெருமைமிக்க கட்டிடக்கலை பாரம்பரியம் கொண்டதுடன், 1933 இல் ஸ்தாபிக்கப்பட்டது, பல்வேறு விடயங்களில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களுடன், ஆசியாவின் முன்னணி அறிவுக் களஞ்சியமாக யாழ்ப்பாண மக்கள் தங்கள் அறிவு மற்றும் ஆற்றலுக்காக பெயர் போனவர்கள். அறிவு என்ற ஆயுதத்தை ஏந்தி, யாழ்ப்பாண நகரின் மையத்தில் உறுதியாக தலைநிமிரந்து நிற்கிறது. யாழ் மக்களே உங்களின் அனைத்து நிதிப் பிரச்சினைகளுக்கும் சாமர்த்தியமான தீர்வுகளைக் கொண்டு வருகிறது

உங்கள் நிதித் திட்டத்தில் நம்பிக்கையையும்
ஸ்திரத்தன்மையையும் சேர்க்கவும்
புதிய ஆற்றலை வழங்கவும் நாங்கள் உங்கள் அருகில் வருகிறோம்

சிங்கர் ஃபினான்ஸ்
வெற்றிகரமான 50 வது கிளை

எமது 50 வது கிளை திறப்பு விழா நாளை யாழ்ப்பாணத்தில் 462 A, வைத்தியசாலை வீதியில் பெருமைக்குரிய கிளையாக திறந்து வைக்கப்படுகிறது. சரியான நிதி அறிவை நாங்கள் உங்களுக்கு வழங்குவோம். சிறந்த பொருளாதார திசையை நோக்கி நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுவோம்.

011 2 400 400

The World Of Hayleys

SINGER FINANCE
ஹேலிஸ் குழுமத்தின் உறுப்பு நிறுவனம்
E-mail: financecompany@singersl.com | Web: www.singerfinance.com | Facebook: SingerFinancePLC


# கடலட்டைப் பண்ணைகள் ஒருபுறம் மறுபுறத்தில் இறால் பண்ணைகள்

## டக்ளஸால் சந்தடியின்றி அடிக்கல்; பொதுஅமைப்புக்கள் போர்க்கொடி

கிளிநொச்சி, மார்ச் 30

வடக்கில் பாரம்பரியமான தொழிலைப் பாதிக்கும் வகையில் கடலட்டைப் பண்ணைகள் ஆக்கிரமிக்கப்பட்டுவரும் நிலையில் தற்போது புதிதாக இறால் பண்ணைகள் அமைக்க கடற்றொழில் அமைச்சர் களமிறங்கியுள்ளார் என பொது அமைப்புக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

இதுதொடர்பில் பூநகரி கௌதாரி முனை பொது அமைப்புக்கள் கூறுகையில்,

கௌதாரிமுனைப் பகுதியில் நூறு ஏக்கர் வரையில் இறால் பண்ணைகள் அமைக்க கடற்றொழில் அமைச்சரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கென சத்தம் சந்தடியின்றி அடிக்கல்லையும் நாட்டிவிட்டுச் சென்றுள்ளார்.

நூறு ஏக்கரில் இறால் பண்ணை அமைக்க தனியாருக்கு எவ்வித ஒப்புதலுமின்றி கடற்றொழில் அமைச்சரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடற்கரைகள் அனைத்தும் கடலட்டைப்பண்ணைகளுக்கென தொடர்ச்சியாக தாரைவார்க்கப்பட்டு வருகின்றது. பூநகரி காற்றாலை திட்டத்துக்கென நிலங்கள் சூறையாடப்படுகின்றன.

இந்த நிலையில் தற்போது தனியாருக்கு எவ்வித ஒப்புதலுமின்றி இறால் பண்ணைகள் அமைக்க கடற்றொழில் அமைச்சரால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவொரு தமிழ் அரசியல் தலைமைத்துவமும் வடக்கு கடற்றொழிலாளர்கள் நிலைமை குறித்துப் பேசுவதில்லை - அக்கறை கொள்வதில்லை.

எனவே நேரடியாக கௌதாரிமுனைக்கு வருகை தந்து இறால் பண்ணை அமைப்பு தொடர்பில் ஆராய்ந்து எம்முடன் பேச்சுக்களை நடத்தி உரிய தீர்வு வழங்கவேண்டும் - என்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் எயிட் குரூப் அவுஸ்திரேலியா நிதி அனுசரணையுடன் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச்சங்கத்தின் ஊடாக, பொருண்மியம் நலிவுற்ற 26 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ய)



கடந்த வருடம் கார்த்திகை மாதம் 5ஆம் திகதி வவுனியா நொச்சிமோட்டையில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் உயிரிழந்த யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவபீட முதலாம் ஆண்டு மாணவி ரா.ஷயஹரியின் ஞாபகார்த்தமாக 34 ஆவது சித்த மருத்துவ அணி மாணவர்களின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் கேட்போர் கூடத்தில் மாபெரும் குருதிக் கொடை முகாம் அண்மையில் இடம்பெற்றது. (ய-66)



மருந்துத் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் கோப்பாய் பிரதேச மருத்துவமனைக்கு ஒருதொகுதி அத்தியாவசிய மருந்துப் பொருள்களை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரியிடம் கடந்த 16ஆம் திகதி வியாழக்கிழமை நேரடியாகக் கையளித்தார். (ய-66)



கிளிநொச்சி - கரியாலைநாகபடுவான் டொன் பொஸ்கோ ஆங்கிலப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி பள்ளி முதல்வர் மெல்வின் றோய் அடிகளார் தலைமையில் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. (ய-13)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு கால மெய்வன்மைப் போட்டிகள் அதிபர் ச.லலீசன் தலைமையில் கலாசாலை மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ய-66-9)







கிளிநொச்சி - மாவட்ட மகா சக்தி பெண்கள் சம்மேளனத்தின் 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, பெண்கள் தின நிகழ்வு விவேகானந்தா நகர்ப் பகுதியில் அமைந்துள்ள மகா சக்தி பெண்கள் சம்மேளன அலுவலக வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது கரைச்சி, கண்டாவளை, புச்சிலைப் பள்ளி, பூநகரி ஆகிய பிரதேசசெயலாளர் பிரிவுகளிலும் சிறு தொழில் முயற்சியாளர்களாக விளங்கும் பெண்களின் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் சந்தையும் மாவட்டச் செயலரினால் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து சாதனைப் பெண்கள் கௌரவிக்கப்பட்டனர். (ய-27)



மிருசுவில் புனித நீக்கிலார் முன்பள்ளிச் சிறார்களின் மழலைகள் மெய்வன்மைத் திறனாய்வும் பரிசளிப்பும் புனித நீக்கிலார் ஆலய முன்றிலில் அண்மையில் இடம்பெற்றது. (ய-9)





யாழ்ப்பாணம் - நெடுந்தீவு பிரதேசசெயலகத்தில் நடத்தப்பட்ட ஆரி தையல் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து தொழில்வாண்மையுடையோராக்கப்பட்ட 27 பயிலுநர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலர் எப்.சி.சத்தியசோதி தலைமையில் பிரதேசசெயலக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ய-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

இணுவிலில் அமைந்துள்ள அரைக்கும் ஆலைக்கு வேலையாள் உடனடியாகத் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**077 841 2187** (CS22585)(J-1)

## அறைகள் வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு சமீபத்தில் மாணவர்களுக்கு அல்லது வேலை செய்பவர்களுக்கு அறைகள் வாடகைக்கு கொடுக்கப்படும்.

**076 808 5192** (CS22586)(J-1)

## மரத்தூசு உண்டு

மரத்தூசு தேவையானோர் தொடர்பு கொள்ளவும். (இலவசமாக பெற்றுக் கொள்ளலாம், யாழ்ப்பாணம்)

(CS2589)(J-1) **077 917 7281**


## அரசாங்க அறிவித்தல்
## பகிரங்க ஏல விற்பனை
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

மாவட்டச் செயலகம் மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வளிபதனாக்கிகள், கணினிகள், பிரிண்டர்கள், ரயர்கள், மின்சார உபகரணங்கள், கட்டடங்களிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் என்பன பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏல விற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் வேலை நாளில் மு.ப 09.00 மணிமுதல் பி.ப 01.00 மணிவரை பொருட்களைப் பார்வையிடலாம். ஏல விற்பனையில் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏல விற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் (பொது172) பெற்று அன்றைய தினம் மாலை 04.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

| இல | அலுவலகம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 1 | பிரதேச செயலகம் பருத்தித்துறை | 03.04.2023(திங்கட்கிழமை) | மு.ப 09.30 | பி.செ பருத்தித்துறை |
| 2 | பிரதேச செயலகம் கரவெட்டி | 03.04.2023(திங்கட்கிழமை) | மு.ப 11.00 | பி.செ கரவெட்டி |
| 3 | பிரதேச செயலகம் தெல்லிப்பளை | 04.04.2023(செவ்வாய்க்கிழமை) | மு.ப 09.30 | பி.செ தெல்லிப்பளை |
| 4 | பிரதேச செயலகம் உடுவில் | 04.04.2023(செவ்வாய்க்கிழமை) | மு.ப 10.30 | பி.செ உடுவில் |
| 5 | பிரதேச செயலகம் கோப்பாய் | 04.04.2023(செவ்வாய்க்கிழமை) | மு.ப 11.30 | பி.செ கோப்பாய் |
| 6 | பிரதேச செயலகம் நெடுந்தீவு | 04.04.2023(செவ்வாய்க்கிழமை) | பி.ப 02.00 | பி.செ நெடுந்தீவு |
| 7 | பிரதேச செயலகம் காரைநகர் | 06.04.2023(வியாழக்கிழமை) | மு.ப 09.30 | பி.செ காரைநகர் |
| 8 | பிரதேச செயலகம் சங்கானை, சண்டிலிப்பாய் | 06.04.2023(வியாழக்கிழமை) | மு.ப 10.30 | பி.செ சங்கானை |
| 09 | தகவல் தொழில்நுட்ப பூங்கா | 10.04.2023(திங்கட்கிழமை) | மு.ப 09.30 | தகவல் தொழில்நுட்ப பூங்கா, யாழ்ப்பாணம் ப.நோ.கூ சங்க கட்டடம் |
| 10 | பிரதேச செயலகம் வேலணை | 10.04.2023(திங்கட்கிழமை) | மு.ப 11.00 | பி.செ வேலணை |
| 11 | பிரதேச செயலகம்- மருதங்கேணி | 11.04.2023(செவ்வாய்க்கிழமை) | மு.ப 09.30 | பி.செ மருதங்கேணி |
| 12 | பிரதேச செயலகம் சாவகச்சேரி | 11.04.2023(செவ்வாய்க்கிழமை) | மு.ப 11.30 | பி.செ சாவகச்சேரி |
| 13 | பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் | 12.04.2023(புதன் கிழமை) | மு.ப 09.30 | பழைய யாழ் பி.செயலக கட்டடம் |
| 14 | பிரதேச செயலகம் நல்லூர் | 12.04.2023(புதன் கிழமை) | பி.ப 02.30 | பி.செ நல்லூர் |
| 15 | மாவட்டச் செயலகம்- யாழ்ப்பாணம் | 20.04.2023(வியாழக்கிழமை) | மு.ப 09.30 | நாவற்குழி அரச களஞ்சியசாலை |

**அ.சிவபாலசுந்தரன்**
**அரசாங்க அதிபர்,**
**யாழ்.மாவட்டம்.**

(cr.39557) (N-1)

## மரண அறிவித்தல்



**கதிரவேலு சிவபாதலிங்கம்**
**(ஓய்வுபெற்ற அதிபர்)**

வேலணை கிழக்கு 2ஆம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி பாண்டியன்தாழ்வு 18/2, விதானையார் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சிவபாத லிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்கள் நேற்று (29.03. 2023) புதன்கிழமை இறைபத மடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 22591) 1/6

## மரண அறிவித்தல்

பிறப்பு 11 • 12 • 1947



இறப்பு 27 • 03 • 2023

**திருமதி.நிர்மலா பவானந்தன்**
**( முன்னாள் ஓய்வு பெற்ற ஆசிரியர் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, கொழும்பு விபுலானந்த தமிழ் மஹா வித்தியாலயம்)**

யாழ்.சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.நிர்மலா பவானந்தன் 27.03.2023 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு.பொன்முத்துக்குமாரன் காலஞ்சென்ற மகேஷ்வரி முத்துக்குமாரன் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.மதியாபரணம் காலஞ்சென்ற திருமதி. இளையம்மா மதியாபரணம் ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முன்னாள் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் திரு.பவானந்தன் அவர்களின் அன்பு மனைவியும், செல்வி கௌரி ஸ்ரீசத்தியா செல்வன் சத்தியோஜாதன் ஆகியோரின் அருமை தாயாரும். திருமதி. ஹேம சபேஸ்வரி வைத்தீஸ்வரன், காலஞ்சென்ற திரு.சிவஞான சம்பந்தன். திரு.தயாநிதி, திருமதி.சிவமனோகரி சிவகுமாரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற திருமதி. கமலாதேவி தவராஜா, காலஞ்சென்ற திரு.விவேகானந்தன் காலஞ்சென்ற திருமதி.நளாயினிதேவி கனகசபை, திரு.சர்வானந்தன்.Dr.ஸ்ரீதரன், திருமதி.ஸ்ரீதேவி சொக்கலிங்கம், திருமதி. சியாமளாதேவி முகுந்தன். Dr.கிருஷ்ணானந்தன், திரு.வைதீஸ்வரன், திருமதி. தனவதனி சிவஞான சம்பந்தன், திருமதி.சிவகாமி தயாநிதி, திரு சிவகுமாரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் வியாழக்கிழமை 30.03.2023 அன்று கல்கிஸ்சை மஹிந்த மலர்ச்சாலையில் மதியம் 12.00 மணி யளவில் நடைபெற்று கல்கிஸ்சை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் - கௌரி ஸ்ரீசத்தியா (மகள்) -0789 628 045**

(CS 23823)(K-1)

## மரண அறிவித்தல்
## வேலுப்பிள்ளை திருஞானசம்பந்தர்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)



சாவகச்சேரி, சங்கத்தானையை பிறப்பிடமாகவும் தற்போது அவுஸ்ரேலியா சிட்னியை வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் அநுராதபுரம் புகையிரத நிலைய அதிபர் வே. திருஞானசம்பந்தர் அவர்கள் நேற்று (29.03.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் திருமதி மீனாட்சிப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (01.04.2023) சனிக்கிழமை அவுஸ்ரேலியா சிட்னியில் இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS22588)(J-1)

எம் அன்புத் தெய்வத்தின்

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி செல்வராணி சின்னராசா**

ஆண்டுகள் ஒன்பதாகிப் போனதோ
அன்னையே நின் முகம் கண்டு
ஆனாலும் எம் மனம் ஆறவில்லை
அன்பாய் உங்கள் ஒரு முறுவல்
காண்போமா மறுமுறை...
அருவமாய் எமை ஆண்டருள்வாய்
இறைவியே!!!



தோற்றம் 24.09.1957 மறைவு 10.03.2014

**குடும்பத்தினர்**
[illegible] சனசமூக நிலையம்,
வல்வெட்டி
வல்வெட்டித்துறை.

(CS 22944)(K-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்கள் திருடிய 40 பில். டொலர் எங்கே?

## பேராதனைப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் கேள்வி

**கொழும்பு, மார்ச் 30**

**ராஜபக்ச அரசாங்கம் ஆட்சிசெய்தபோது நாட்டின் வளங்களை கொள்ளையடித்த - சூறையாடிய 40 பில்லியன் அமெரிக்க டொலர் தொடர்பில் அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது ஊழலை ஊக்குவிக்கும் செயற்பாடாகும் - இவ்வாறு பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட பொருளியல் விரிவுரையாளர் கல்ப ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் குறிப்பிட்டதாவது:- சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி இலங்கைக்கு கிடைத்த வெற்றி என மார்தட்டுகிறார்கள். ஆனால், கிரேக்கம், எதியோப்பியா போன்ற நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளைக் கேட்டு படுதோல்வியடைந்துள்ளமை வரலாற்றுப் பதிவுகளாகும்.

நாங்கள் இப்போதும் இருண்ட காலப்பகுதியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாட்டில் எரிந்துகொண்டிருக்கும் பிரச்சினைகளான வறுமை ஒழிப்பு, பொருளாதார மறுசீரமைப்பு போன்ற விடயங்களில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். 2025ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வரவுள்ள செல்வந்த வரி, பரம்பரைச் சொத்து வரி என்பவற்றுடன் வற், போன்ற நேரடி வரிகளால் சமூக ஏற்றத் தாழ்வுகள், கூலி அதிகரிப்பு என்பன ஏற்படுவதுடன் வறுமையும் பெருமளவில் ஏற்பட வாய்ப்புள்ளது. ஏற்றுமதிகள் குறைவடைந்து இறக்குமதிகள் அதிகரிக்கக்கூடும்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு 450 பில்லியன் ரூபா வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. நாட்டின் வளங்களைக் கொள்ளையடித்த 40 பில்லியன் அமெரிக்க டொலர் தொடர்பில் அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்காது ஊழலை ஊக்குவிக்கிறது. இத்தகைய செயற்பாடுகள் நாட்டை நவதாராளவாதத்துக்கு கொண்டு செல்லும். (ச-6)

# பெரமுனவைத் தூக்கிநிறுத்த களமிறங்கியுள்ளாராம் மஹிந்த

கொழும்பு, மார்ச் 30

நாட்டின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக அடிமட்டத்தில் வீழ்ந்து கிடக்கும் பெரமுனவைத் தூக்கி நிமிர்த்துவதற்கு மஹிந்த ராஜபக்ச முழு வேகத்தில் இப்போது களமிறங்கியுள்ளார்.

அண்மையில் மொனராகலையில் முதலாவது கூட்டத்தை நடத்திக் கட்சியைப் பலப்படுத்தும் வேலைத்திட்டத்தை அவர் ஆரம்பித்து வைத்துள்ளார். கொழும்பு விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தைக் கட்சியைப் பலப்படுத்தும் ஒரு மத்திய நிலையமாக அவர் மாற்றியுள்ளார். அந்த வீடு பல கோடி ரூபா செலவில் அண்மையில் தான் புதுப்பிக்கப்பட்டது. அங்கு அமைக்கப்பட்ட மண்டபம் சந்திப்புக்களை நடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் இருந்த பெரமுன இப்போது 95 எம்.பிக்களை மாத்திரம் கொண்டுள்ளது. அவர்களுள் பலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நெருக்கமாகியுள்ளனர். இவர்கள் எல்லோரையும் ஒன்றிணைத்துப் பிரிந்து சென்ற கட்சியின் ஆதரவாளர்கள், வாக்காளர்கள் அனைவரையும் மீண்டும் இணைத்துக் கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் இப்போது மஹிந்த இறங்கியுள்ளார். எதிர்வரும் ஜூன் மாத இறுதிக்குள் கட்சியைப் பலப்படுத்திவிட வேண்டும் என்ற இலக்கைக் கையில் எடுத்துக் கொண்டு மஹிந்த களமிறங்கியுள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (ம-22)

## கிளிநொச்சியில் பேருந்து நிலையம்

கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. (ம14,113)


# மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 12 . 1934

மறைவு 28 . 03 . 2023

## Dr. வேலுப்பிள்ளை வைரமுத்து

**(ஓய்வுநிலை உதவி வைத்திய அதிகாரி)**

ழ். இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், 44/7, A/1, மணற்தறை ஒழுங்கை, கந்தர்மடத்தை விடமாகவும் கொண்ட Dr. வேலுப்பிள்ளை வைரமுத்து கடந்த (28.03.2023) செவ்வாய்க்மை இறையடி சேர்ந்தார்.

ன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்புனும், காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை - கண்ணகைப்பிள்ளை தம்பதிகளின் மிகு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், மங்கையக்கரசியின் பாசமிகு ாதரனும், கந்தசாமி, சுவாமிநாதன், நாகேஸ்வரி, இடைக்காடர் ஈஸ்வரன், இடைக்காடர் ்னையா, இராமநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பொற்செல்வி, கமலநாயகி, ்வவேல், தயாபவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செங்கோ, அமுதினி, நீதிமப்பிரியா யோரின் அன்பு மாமனாரும், சேதன், பிரசாத், சேயோன், மயூரன், ஜனுசியா, தான்யா யோரின் அன்புப் பேரனும், வேல்முருகன், கிருபாகரன், நரேந்திரன் ஆகியோரின் அன்பு னாரும் ஆவார்.

ன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2023) வியாழக்கிழமை முற்பகல் 10 ரியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து ானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

ந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ந்தர்மடம்,
ழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/22572)AH-1



# மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 06 . 1945

மறைவு 29 . 03 . 2023

## கந்தையா வன்னியசிங்கம்

**(உரிமையாளர் விஜயா மில்)**

பெருந்தெரு புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கருவப்புல வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வன்னியசிங்கம் நேற்று (29.03.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவக்கொழுந்து தம்பதியரின் மகனும், வ.விஜயலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், திருமதி தர்சினி ராஜ்பவான் (கல்வி அமைச்சு, வடமாகாணம்) அவர்களின் அன்புத் தந்தையும், இ.ராஜ்பவான் (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம், நெடுந்தீவு) அவர்களின் மாமனாரும், ஆராதனா (யா/இந்து ஆரம்பப் பாடசாலை) அவர்களின் பேரனும், வெற்றிவேல் (கனடா), இரத்தினசிங்கம் (லண்டன்), சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22590) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘சின்னத்தம்பி’ அறக்கட்டளையின் 2 ஆவது அறங்காவலர் தின நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 30

பளை, இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோயில் தர்மகர்த்தா ‘சின்னத்தம்பி’ அறக்கட்டளையின் இரண்டாவது அறங்காவலர் தின நிகழ்வு, ஆலய ஷரண்யா மண்டபத்தில் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நினைவுப் பேருரையை “சைவ பண்பாடும் பேணுகையும்” என்னும் பொருளில் கிளிநொச்சி திருநெறிக்கழக செயலாளர் அ.சிவஞானசுந்தரம் நிகழ்த்தவுள்ளார். அதனையடுத்து ‘சுதர்சனம் 2’ நூல் வெளியீடு இடம்பெறும்.

நூலின் ஆய்வுரையை ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராஜா நிகழ்த்தவுள்ளார்.

இறுதியாக கடந்த 2021, 2022 ஆம் ஆண்டுகளில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிரதேச மாணவர்களுக்கு மதிப்பளிப்பும் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச்செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் க.அ.சிவனருள் ராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14-9)

## கீரிமலை முத்துமாரி ஆலய மாரா சூரசம்ஹார உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

கீரிமலை ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் ஆலய மாராசூரசம்ஹார உற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும், மறுநாள் திங்கட்கிழமை பங்குனித்திங்கள் குளிர்ச்சி உற்சவமும் கீரிமலைச் சந்தியில் வழமை போன்று சிறப்பாக இடம்பெறவுள்ளன.

எனவே இரு உற்சவங்களிலும் அடியார்கள் கலந்துகொண்டு அம்பாளின் அருள் பெறுமாறு ஆலய ஆதீனகர்த்தா நவராஜ உமாபதீஸ்வரக்குருக்கள் அறிவித்துள்ளார். (ஒ-14-6)

## மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

சரவணை - பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பள்ளம்புலம் முருகமூர்த்தி நால்வர் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிலையத் தலைவர் கிருஷ்ணசாமி மணிராஜ் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச)




## பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, மார்ச் 30

கைதடிதெற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நிலைய மண்டபத்தில் தலைவர் இ.சிவகாந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது சாவகச்சேரி பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீசன் முன்னிலையில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளது.

எனவே நிலைய அங்கத்தவர்கள் மற்றும் உப குழுக்களின் நிர்வாகிகள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சனசமூக நிலைய செயலாளர் இ.கந்தசாமி அறிவித்துள்ளார். (ஒ-14-9)

### இறக்குமதிப் பொருள்களை

# அதிக விலையில் விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும்

### நுகர்வோர் அதிகாரசபை தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 30**

**இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலை பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளதால், அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் சாந்த நிரியல்ல தெரிவிக்கையில்;

அமெரிக்க டொ[illegible] வின் மதிப்பு [illegible] தால், அதிகரிக்கப்பட்ட பெரும்பாலான பொருள்களின் விலைகள் தற்போது குறைந்துள்ளன. எனினும், பல வர்த்தக நிலைய உரிமையாளர்கள் அதிக விலைக்கு பொருள்களை விற்பனை [illegible] என்று நுகர்வோர் அதிகாரசபைக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. முறைப்பாட்டுக்கமைய நாடளாவிய ரீதியில் அதிகவிலைக்கு பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களைத் தேடி விசேட சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்படும் - என்றார். (ஒ-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனை சுற்றிவளைத்து அணுவாயுதங்கள் நிறுத்தம்!

## ரஷ்யா அதிரடி நகர்வு

**கீவ், மார்ச் 30**

**உக்ரைனைச் சுற்றிவளைத்து அணுவாயுதங்களை நிறுத்தியுள்ளது ரஷ்யா. பெலாரஸ் வழியாக இந்த அணுவாயுத நிறுத்தத்தை ரஷ்யா தீவிரமாக முன்னெடுத்துள்ளது. ரஷ்யாவின் இந்த நடவடிக்கை அந்த நாடு பெரும் அணுவாயுத மோதலுக்குத் தயாராகியுள்ளதா என்ற கேள்வியை ஏற்படுத்தியுள்ளது.**

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முன்னெடுப்புக்களை அடுத்து, உக்ரைனுக்கு எதிராக கடந்த வருடம் பெப்ரவரி மாதம் போரை அறிவித்தது ரஷ்யா. கடந்த ஒரு வருடங்களாக இந்த இரண்டு நாடுகளுக்கு இடையில் தீவிரமாகப் போர் இடம்பெற்று வருகின்றது. உக்ரைனின் கிழக்குப் பகுதியில் ரஷ்ய மொழி பேசுபவர்கள் செறிந்து வாழ்ந்த பகுதிகளைக் கைப்பற்றியுள்ள ரஷ்யா அதை தன்னுடன் இணைத்துள்ளது. இதற்கு உலக நாடுகள் கடும் கண்டனத்தைத் தெரிவித்தன. அத்துடன், ரஷ்யாவுக்கு எதிராகப் போரிடுவதற்காக உக்ரைனுக்கு இராணுவத் தளபாடங்களை அள்ளிக்குவித்தன. இந்த ஆயுத உதவிகள் ரஷ்யாவைப் பலவீனப் படுத்தியது மட்டுமல்லாமல் தற்போது உக்ரைனுக்கு ஏராளமான நிதியுதவிகளையும் 'அடுத்தகட்ட' ஆயுத உதவிகளையும் ஐரோப்பிய நாடுகளும் நேட்டோ உறுப்பு நாடுகளும் வழங்கி வருகின்றன. இவற்றில் மேம்பட்ட இராணுவத் தளபாடங்களும் உள்ளடக்கம். இதையடுத்தே உக்ரைனைச் சுற்றிவளைத்து அணுவாயுதங்களை நிறுத்தியுள்ளது ரஷ்யா.

ரஷ்யாவின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. 'உக்ரைனை அழிப்பதற்கு ரஷ்யா திட்டமிட்டுள்ளது. புடினின் நாசகார நடவடிக்கை தற்போது வெளிச்சமாகியுள்ளது' என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. எனினும், அமெரிக்காவின் கருத்துக்களை ஏற்க ரஷ்யா மறுத்துள்ளது. 'ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்கா தனது அணுவாயுதங்களை நிறுத்தி வைத்துள்ளது. அது ஏன்? அதுபோன்றுதான் எமது நட்பு நாடுகளில் நாம் அணுவாயுதங்களை நிறுத்தி வைத்துள்ளோம். அவ்வளவே!' என்று ரஷ்யா பதிலளித்துள்ளது. அமெரிக்காவிடம் அணுவாயுதங்கள் இருந்தாலும், ரஷ்யாவிடம் உள்ளதுபோன்றளவுக்கு அணுவாயுதங்கள் இல்லை. நேட்டோக் கூட்டணிக்கு நிகரான அணுவாயுதங்கள் ரஷ்யாவிடம் கைவசம் உள்ளது என்று போரியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)







## மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 07 . 1948



இறப்பு 29 . 03 . 2023

### திருமதி அன்ரனி றெஜினா

மண்டைதீவு 3ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கரீற்றல் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்ரனி றெஜினா நேற்று (29.03.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரி வரவணிக்கத்தின் அன்பு மகளும், நீக்கிலாப்பிள்ளை மேரிப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அன்ரனியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து தேவராசா (அதிபர்), பெர்னபெற்றம்மா, செபஸ்ரின்பிள்ளை, பேனாட் மற்றும் சிப்பிரியான் காலஞ்சென்ற லில்லிமாகிறேட் மற்றும் றீற்றம்மா, எட்மன் காலஞ்சென்ற ஜோசப் ஜெயபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயராஜ் டயானா (ஆசிரியர், றோ.க. பாடசாலை - மண்டைதீவு), ஆன்சோபனா (டெனா - லண்டன்), தீபன் ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெயராஜ் (ஆசிரியர், சென். பெனடிக்ற் பாடசாலை), சந்திரராஜா (லண்டன்), ரஞ்சிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், அக்ஷயன், கஷோன், அன்றிஸ், அரோன், திஷான், ரித்திஷ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (31.03.2023) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு கரீற்றல் வீதியிலுள்ள இல்லத்திலிருந்து மண்டைதீவிற்கு எடுத்துச்செல்லப் பட்டு, மண்டைதீவு 3ஆம் வட்டாரத்திலுள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 10.00 மணிக்கு புனித பேதுருவானவர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 - 07 - 1941



மறைவு 29 - 03 - 2023

### நடராசா சிவபாக்கியம்

தையிட்டிபுலம் வித்தகபுரத்தைப் பிறப்பிடமாகவும் வீரபத்திரர் கோவிலடி மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவபாக்கியம் அவர்கள் நேற்று (29.03.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு சின்னாச்சிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான விசுவநாதர் நாகமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், கலாவதி(ஜேர்மனி), கலைவாணி(ஆசிரியர்-பலாலி வடக்கு அ.த.க. பாடசாலை), உமா (ஆசிரிய்ர்-முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலநாதன்(ஜேர்மனி), சிவானந்தன்(மல்லாகம்), உதயகுமார் (முள்ளியவளை) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிவகுலம் அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற யோகம்மா மற்றும் சின்னாச் சிப்பிள்ளை, திலகவதி ஆகியோரின் மைத்துனியும், கோபிகன், கோபிகா, சாருகன், ஜஸ்மினா, சரன், டிவாகினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2023) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி - மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] லேன்,
வீரபத்திரர் கோவிலடி,
மல்லாகம்.

(CS22594)(J-1)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடுக்குநாறிமலையில்...

தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- வெடுக்குநாறிமலையில் ஆதிலிங்கம் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விசாரணை நடத்தி முழுமையானதொரு அறிக்கையை வழங்குமாறு, பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வவுனியா, வெடுக்குநாறி மலைக்குச் செல்லவுள்ளேன். இதன்போது அங்கு சேதமாக்கப்பட்டுள்ள லிங்கத்தை மீளமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இலங்கை முன்னேறுவதற்கு இன, மத நல்லிணக்கம் என்பது மிக முக்கியமானது. அதனை ஏற்படுத்துவதற்கு எமது அரசு தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. இந் நிலையில் அதனை சீர்குலைக்கும் வகையில் இடம்பெறும் சம்பவங்களை அனுமதிக்கமுடியாது. அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார். (அ-ம)

## வவுனியாவில்...

இன்று காலை 9.30 மணியளவில் வவுனியா கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பிக்கும் இந்தப் போராட்டம் பின்னர் பேரணியாக வவுனியா மாவட்டச் செயலகம் வரை செல்லவுள்ளது. வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகவும் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் இன்று இடம்பெறவுள்ளன. இந்தப் போராட்டத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி உள்ளிட்ட பல கட்சிகளும் தமது நிபந்தனையற்ற ஆதரவைத் தெரிவித்துள்ளன.

இதேவேளை- வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வர ஆலயம் அழிக்கப்பட்டமைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளமையால் இன்று திட்டமிட்டிருந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது என்று சமூக வலைத்தளங்களில் நேற்றுச் சிலரால் வதந்தி பரப்பப்பட்டது. இவ்வாறான வதந்திகளைக் கண்டித்த ஏற்பாட்டாளர்கள், போராட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் என்றும் அதற்கு கட்சி பேதமின்றி யாவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளனர். (அ-ம-110)

## தவறிழைக்கும்...

விடுகைப்பத்திரங்களை வழங்குவது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கும் கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்துக்குட்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இடையிலான கலந்துரையாடல், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி விடயம் சுட்டிக் காட்டப்பட்டது.

பாடசாலைகளில் ஒழுக்கத்துக்கு மாறாக செயற்படுகின்ற அல்லது தவறிழைக்கின்ற மாணவர்களுக்கு தண்டனையின் ஒருபகுதியாக விடுகைப் பத்திரத்தை வழங்குவதை பாடசாலை அதிபர்கள் தொடர்ச்சியாகப் பின்பற்றி வருவதால் அவ்வாறு விடுகைப் பத்திரத்தை வழங்கி பாடசாலையிலிருந்து வெளியேற்றப்படும் மாணவர்கள் சமூகத்தில் பல்வேறு குற்றச் செயல்களைப் புரியும் நபர்களாக இனங்காணப்படுகின்றமை தொடர்பில் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

இதன்போதே, தவறிழைத்த மாணவர் தொடர்பில் பாடசாலை ஒழுக்காற்றுக் குழுவினைக் கூட்டி பாடசாலையிலிருந்து இடைவிலகாத வகையில் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமே தவிர, மாணவர்களுக்கு விடுகைப்பத்திரம் வழங்கும் அதிகாரம் அதிபர்களுக்கு வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே அதிபர்கள் ஒழுக்காற்று நடவடிக்கை என்ற பெயரில் மாணவர்களுக்கு விடுகைப்பத்திரத்தை வழங்குவதானது, அதிபர்கள் தமக்கு கையளிக்கப்படாத அதிகாரத்தை செயற்படுத்துவதாகும் எனவும் எனவே இது அதிகார வரம்புமீறல் எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. (அ-ம)

## மண்டைதீவு...

சோதனை முகாம் பயன்படுத்தப்படும். அங்கு வாகனங்கள் தீவிரமாகச் சோதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, தீவகத்திலிருந்து பொருள்கள் திருடப்பட்டு கடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்தே மண்டைதீவில் உள்ள சோதனை முகாமைப் பலப்படுத்தி அங்கு சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் இந்தக் கடத்தல்களை கட்டுப்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இதைவிட, புங்குடுதீவுப் பகுதியில் இருந்து படகுகள் மூலம் மாடுகளும், இதர பொருள்களும் வேறு பகுதிகளுக்குக் கடத்தப்படுகின்றன என்றும் இதைக் கடற்படை கட்டுப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையும் இந்தக் கலந்துரையாடலின்போது முன்வைக்கப்பட்டது. (அ-ம)

## பெற்றோல்,...

இதன்படி 92 ஒக்ரேன் பெற்றோலின் விலை 60 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலையாக 340 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 95 ஒக்ரேன் பெற்றோல் லீற்றரொன்றின் விலை 135 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலையாக 375 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் விலை 80 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 325 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு லீற்றர் சுப்பர் டீசலின் விலை 45 ரூபா குறைக்கப்பட்டு புதிய விலையாக 465 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி புதிய விலையாக 295 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் முதல் வாரத்தில் மேற்கொள்ளப்படவிருந்த விலை மறுசீரமைப்பு இம்முறை முன்கூட்டியே செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய ஆலோசனைக்கமையவே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த விலை மறுசீரமைப்பு மே மாதம் முதல் வாரத்தில் இடம்பெறும் என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## பேருந்துக்...

மின்சக்தி, எரிசக்தி அமைச்சால் எரிபொருள் கட்டணங்கள் நேற்றுக் கணிசமான அளவு குறைக்கப்பட்டன. இதையடுத்தே பேருந்துக் கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன. இதன்படி இதுவரை காலமும் குறைந்தபட்ச பேருந்துக் கட்டணமாக 40 ரூபா இருந்த நிலையில் தற்போது குறைந்தபட்ச பேருந்துக் கட்டணம் 30 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## கடற்படையின்...

பற்றுவதன் மூலம் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தலாம் என்று கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

வடமராட்சியில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி பலர் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதனால், சிறியளவில் (குறைந்த வலைகளைக் கொண்டு) தொழில்செய்வோரும், சட்டநடைமுறைகளைப் பின்பற்றி நேர்மையாகத் தொழில் செய்வோரும் கடும் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது. கடற்படையினர் இந்த சட்டத்துக்குப் புறம்பான கடற்றொழில் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தத் தவறுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்தே, இன்று வியாழக்கிழமை முதல் வடமராட்சியில் கடற்றொழில் நடவடிக்கைக்காகச் செல்வோர் கடற்படையினரிடம் உரிய அனுமதிபெற்றுச் செல்லவேண்டும் என்றும், இதன் மூலம் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அது ஏதுவாக இருக்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ-ம)

## ஹெரோய்னுடன் பெண்...

ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அவர் மேலதிக விசாரணையின் பின்னர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். இதன்போது எதிர்வரும் 9ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம)

## ஹெரோய்னுடன் 8 பேர்...

நடத்தப்பட்ட சுற்றிவளைப்புக்களின்போது, 3 கிராம் ஹெரோய்னுடன் 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம், நேற்று என இரண்டு தினங்கள் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அவர்கள் அனைவரும் எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-125)

## இந்துக்களின்...

தலைமையில் கலந்துரையாடலில், வடக்கு - கிழக்கில் உள்ள சைவசமயம் சார்ந்த அமைப்புக்கள், கோவில் தர்மகர்த்தா சபையினர், ஆதீன கர்த்தாக்கள் மற்றும் கோவில் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் கலந்துகொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

**சமையலாள் தேவை**

யாழ்.நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக்கூடிய ஒருவர் தேவை.

• சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

**070 356 7811**

(cs22577)(N-1)

**காணி விற்பனைக்கு**

இயக்கச்சியில் 40 பரப்பு தென்னந்தோட்டம் (Reecha Farm அருகில்) விற்பனைக்குண்டு.

**076 200 9025**

(CS22587)(J-1)

## மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 06 . 1946



இறப்பு 29 . 03 . 2023

**மாரிமுத்து குலசேகரம்**

**(ஓய்வுநிலை அதிபர்)**

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, இராச வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து குலசேகரம் நேற்று (29.03.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - வள்ளியம்மை தம்பதியரின் அன்புப் புதல்வனும், முத்துமாரி, சோமசேகரம், பரிமளாதேவி, ஞானசேகரம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திரவியத்தின் அன்புக் கணவரும், யசிதரன், முரளிதரன், மைதிலி, மஞ்சு ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிரஞ்சன், மதியழகன், நேமிராயனி, தயாளினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லக்சிஷன், வர்ஷன், கோகுலரமணன், லயாஹரி, சிந்து, யெனோயெனீனி, பவிதா, சானு ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
076 8946 477 (மகன்)

(CS 22593) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் பூசகர் தேவை

அராலி மத்தி ஸ்ரீ நாகபூசனி அம்மன் ஆலயத்திற்கு நல்ல பூசகர் தேவை. பூசைக் காலங்களில் தங்குவதற்கு வீடு வசதி வழங்கப்படும். விரும்பமானவர்கள் தொடர்புகொள்ளவும்.

**077 331 1137**

(cs 225791) (N)

## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள TATA Super A/C 2017 Model விற்பனைக்குண்டு விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 995 4213**

(cs 225771) (N-1)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

தெல்லிப்பளையில் உள்ள வீடொன்றிற்கு தங்கி நின்று வேலை செய்ய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 400 5023**

(cs 225781) (N)

## காணி விற்பனைக்கு

ஏ 9 வீதியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்துக்கு முன்பாக 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(CR 39555)(K - 1)

**தொடர்பு : 076 256 3463**

## காணி விற்பனைக்கு


யாழ்ப்பாணம் உடுவில் லவ் லேன் 1ஆம் ஒழுங்கையில் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(CS24186)(K-1)

**077 809 6181, 076 483 5520**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம்
03 . 08 . 1950



மறைவு
10 . 04 . 2022

கடந்த (10.04.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் அன்புத் தந்தை

### தம்பிப்பிள்ளை கனகரத்தினம்
### (பெரியண்ணை)

உங்கள் அமைதி முகமும் அரவணைப்பும்
உங்கள் நினைவலைகளும்
எங்கள் நெஞ்சை விட்டு அகலவில்லை அப்பா !

தூணாக காலமெல்லாம் காத்திடுவீர்கள் என இருந்தோம்
காலன் அழைத்தவுடன் கரைந்ததேனோ காற்றோடு?

வானம் விரிந்திங்கு வண்ண மழை தூவினாலும்
காணும் உறவெல்லாம் கைகொடுத்து உதவினாலும்

அப்பா உங்கள் உறவு இப்போதில்லை என்ற உணர்வு
அனலாய் எறிக்குதப்பா அகிலமே வெறுக்குதப்பா!

நீங்கள் பூவுலகை விட்டு மறைந்த போதும்
உங்களது ஆத்ம வழிகாட்டலிலும்
உங்களது நினைவுகளுடனும்
எமது வாழ்க்கை பயணம் தொடரும் அப்பா!

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (30.03.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்பம் சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

**(செட்டி சீமா வீதி)**
**பத்தமேனி.**
**வைரவர் கோவிலடி,**
**அச்சுவேலி.**

**நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

(cs 22573) (N-1)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 87 பரப்புக் காணி விற்பனைக்கு

**மேட்டு நிலம் (நிலப்பரப்பு)**




* யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து 100 M தூரத்தில்.
* 15 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
* குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி.
* நன்னீர் ஊற்று நிலம்.
* ஒருபரப்பின் விலை (300,000/-) மூன்று இலட்சம் மற்றும் (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
* விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த காணி.
* பருத்தித்துறை வீதியிலிருந்து 1 KM தூரம். சோமாஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 KM தூரம்.
* **பார்வையிடும் நேரம் :**
  **காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.**

**Owner@Director.**
**T.Kalaithasan(Karan)**

**076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**
**Office No.:021 3155 900**

## காணிகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **அச்செழுப்** பகுதியில் 30 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது
- ✓ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- ✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ✓ நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது).
- ✓ 1 பரப்பின் விலை காபெற் வீதியை பிரதான முகப்பாக கொண்ட காணிகள் 15 இலட்சம்,
  18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.

**பார்வையிடும் நேரம்:-**
**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 120 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:-**
**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**
தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**

(CS 22583) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.